**செய்தி வெளியீடு எண்.9** **நாள்.4.1.2008**

**ஊராட்சிகளின் நிதி நிர்வாக வரம்பு உயர்த்தப்பட்டது – மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தகவல்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளான கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் மூலம் பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் மற்றும் திட்டம் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் கோருதல் தொடர்பான நிபந்தனைகள் ஆகியவை குறித்து ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு திருத்தம் செய்து புதிய அரசாணை எண் 203, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 20.12.2007 மூலமாக வெளியிடப்பட்டுள்ளது என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய விதிமுறைகளில், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் தமது பொது நிதி மற்றும் மத்திய, மாநில அரசு நிதிகளின் மூலம் செயல்படுத்தும் பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்குவது குறித்த விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி கிராம ஊராட்சிகளின் பொது நிதிப் பணிகளை பொறுத்து ஏற்கனவே ஒரு இலட்சம் ரூபாய் வரையிலான பணிகளுக்கு கிராம ஊராட்சியே நிர்வாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த உச்சவரம்பு தற்போது இரண்டு இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோல் ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளும் பணிகளைப் பொறுத்து, ஊராட்சி ஒன்றியம் ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த உச்சவரம்பு தற்போது பத்து இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது,

மாவட்ட ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளும் பணிகளை பொறுத்து மாவட்ட ஊராட்சியே பத்து இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த உச்சவரம்பு தற்போது இருபது இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

அதிகரித்துவரும் விலைவாசி மற்றும் கட்டுமானப் பொருள்களின் விலை உயர்வு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களது கோரிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும் ஊரக உள்ளாட்சிகள் வளர்ச்சிப் பணிகளை தமது பொது நிதியில் இருந்து மேற்கொள்ளுவதற்கு என உள்ள முந்தைய நடைமுறையை எளிமைப் படுத்தி நிர்வாக அனுமதி வழங்குவதற்கான நிதி வரம்பினை உயர்த்தி அதிக அதிகாரம் வழங்கும் வகையிலும் இந்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

வெளியீடு: **இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**